ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

10. அறிவிப்பு

சட்டமன்ற உறுப்பினர்களுக்கான கணினிவழிப் பயிற்சி 7-9-2021 மற்றும் 9-9-2021 ஆகிய நாட்களில் நடைபெறுதல் மற்றும் சிம் கார்டு வாங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இன்று 7–9–2021 மாலை 5.30 மணிக்கும், 9–9–2021 அன்று மாலை 5.30 மணிக்கும், இதே அரங்கத்தில் கணினிப் பயிற்சி நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கையடக்கக் கணினியை*

(Tab) *எடுத்து வருமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு* sim card *வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (8–9–2021) புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–53 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

25. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்முதல் கடப்பாடு) ஒழுங்குமுறை விதிகளுக்கு திருத்தம் செய்தது குறித்து 24–7–2020 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./புகொக/19–5–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

26. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பிற்கு திருத்தங்கள் செய்தது குறித்து 16–7–2020 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./மின்.வவி. தொ./7–43–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*27. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின்கட்டண வீதத்தினை நிர்ணயம் செய்வதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறை விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 18–9–2020 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./*T.R*/5/2–12–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

28. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பு மற்றும் தமிழ்நாடு மின்